மின்சாரம்தான் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மின் தேவை அதிகமாக இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

74—

தார்ச் சாலையைச் சீரமைத்தல்

***2557—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமத்திலிருந்து ரெங்கபாளையத்திற்கு வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, திருக்கூர்ணம் ஊராட்சி, சீத்தப்பட்டி கிராமம் முதல் ரெங்கபாளையம் வரை வெங்கடாபுரம் வழியாகச் செல்லும் தார்ச் சாலை அமைக்கும் பணி 2016–2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2.40 கி.மீ. நீளத்திற்கு ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தட்டு மக்களுக்கான அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்வதில் அம்மா அவர்களுக்கு நிகர் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் வழி நடக்கும் அரசுதான் இந்த அரசு என்பதை நிரூபிக்கும் விதமாக மக்கள் கேட்டுக்கொண்ட சித்தப்பட்டி—ரெங்கபாளையம் சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையினை சட்டமன்றத்திலே வினாவாக எழுதிக் கொடுத்து, அதை இந்தச் சபையிலே எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகவே, அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற செய்தி உள்ளபடியே மகிழ்ச்சியை அளிக்கிறது. தேர்தல் காலங்களிலே பொதுமக்கள் எங்களிடத்திலே கேட்டுக்கொண்ட முக்கியமான சாலைப் பணிகளையெல்லாம், அம்மா அவர்களுடைய அரசு ஓராண்டு நிறைவு செய்வதற்கு முன்னதாகவே, உள்ளாட்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளின் மூலமாக 27 கோடி ரூபாயினை ஒதுக்கி, முக்கிய சாலைகள் மற்றும் பாலங்களுக்கான பணிகள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு சிறு கோரிக்கையை மட்டும் இந்த நேரத்திலே வைத்து அமர விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்த திட்டம் 'தாய்' திட்டம். ஒவ்வொரு வருடமும் கிராமங்களைத் தேர்வு செய்து, அந்தக் கிராமங்களுடைய அடிப்படை வசதிகள், சிறு சிறு தேவைகள் ஆகியவற்றை 'தாய்' திட்டத்தின்மூலம் நிறைவேற்றவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள். 'தாய்' திட்டத்தின்கீழ் சாலைகளைத் தேர்வு செய்யும்போது ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவாக உள்ள சாலைகளைத் தேர்வு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. Road code-ல் அச்சாலை இல்லை. ஒரு கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள

சாலைகளை மட்டுமே அந்தத் திட்டத்திலே இணைக்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் அதைக் கனிவோடு பரிசீலனை செய்து, இனிவரும் காலங்களில் 600 மீட்டர், 800 மீட்டர் என்று ஒரு கிலோ மீட்டருக்குக் குறைவாக இருக்கின்ற, அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான இணைப்புச் சாலைகள் அல்லது முக்கியமான சாலைகளையும்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை பணிவோடு அவரிடம் வைத்து, மீண்டும் ஒரு முறை நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கோரிக்கையை வைத்துள்ளார். அதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கண்டிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய மையப் பகுதியில், தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், என்னுடைய ஆளுகைக்குட்பட்ட இடங்களில் ஏதாவது குறைகள் இருந்தால், அதுகுறித்து என்னிடம்தான் பேசவேண்டும். அந்தப் பிரச்சினையை அவையில் பேசுவது முறையல்ல. எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. சு. புகழேந்தி, நீங்கள் உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 மார்ச் 23]

(குறுக்கீடுகள்) *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி போன்ற ஊராட்சி ஒன்றியங்களில் போடப்பட்ட ஊராட்சி சாலைகள் சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, சாலைகளைச் செப்பனிடுவதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதி, பொது நிதியாக இருந்தாலும் சரி, மற்ற இனங்களிலிருந்து ஒதுக்கப்படுகின்ற நிதியாக இருந்தாலும் சரி, அது போதுமானதாக இல்லை. அந்தச் சாலைகளெல்லாம் இன்றைக்குக் குண்டும், குழியுமாக இருக்கின்றன. இந்தச் சாலைகளைச் செப்பனிட சிறப்பு நிதியொதுக்க வேண்டும். தமிழகம் முழுவதும், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இப்படி இருக்கின்ற அத்துணை சாலைகளையும் ஏதேனும் சிறப்பு நிதியை ஒதுக்கியாவது செப்பனிட மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

தமிழகத்தில் இருக்கின்ற 385 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகளை இணைக்கின்ற ஊராட்சிச் சாலைகளை அங்கிருக்கின்ற நெடுஞ் சாலைத் துறை கோட்டப் பொறியாளர், ஊரக வளர்ச்சித் துறையின் செயற்பொறியாளர், மாவட்ட திட்ட அலுவலர் ஆகிய மூன்று அலுவலர்களும் எந்தெந்தச் சாலைகள் அவ்வாறு இருக்கின்றன என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால் ஒரு சாலையின் பாதிப் பகுதி நெடுஞ்சாலைத் துறையின்கீழ் வருகிறது. மீதிப் பாதிப் பகுதி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. அவ்வாறான சாலைகளையெல்லாம் கண்டறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக, அறிக்கையைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி—இரண்டு துறைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கின்ற காரணத்தால்— அப்படிப்பட்ட சாலைகளையெல்லாம் இணைத்து, நெடுஞ்சாலைத் துறைக்குட்பட்ட மாவட்ட இதர சாலைகளின் பட்டியலில் சேர்ப்பதற்கு மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக

வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் ஒட்டன்சத்திரம் தொகுதியில் 10 ஆண்டுகள் ஆன சாலைகளைப் பழுது பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே, ஊரகப் பகுதிகளில் மட்டும் 46,555 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 8,786 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்களின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, சிறப்பான முறையில் அமைக்கப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்து இதுபோன்ற பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரியின் கிராமச் சாலைகள் திட்டம்–PMGSY ஆகிய திட்டங்களின்கீழ் அதிகமான சாலைகள் கிராமங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதேபோல நபார்டு. இப்படி நகர்ப்புறச் சாலைகளையும் பல திட்டங்களில் எடுத்துக்கொள்கிறோம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு கொறடா அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை, தனிப்பட்ட எந்தச் சாலை என்று சொன்னால், கண்டிப்பாக உடனடியாக அது எடுத்து மேம்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள சாலைகளை ஆய்வு செய்து, முன்பே 7 ஆயிரம் சாலைகளை நெடுஞ் சாலைத் துறைக்கு ஒப்படைத்திருக்கின்றோம். அந்த மாதிரியான நடைமுறை இருக்கிறது. அதிலே சிறு, சிறு பிரச்சினைகள் இருந்ததால், பணிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன. கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 23]

கடந்த முறை நீங்கள், சட்டமன்ற உறுப்பினராக, கொறடாவாக இருந்தீர்கள். நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இரண்டின் கீழும் வரும் சாலைகளை, யார் செய்வது என்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அப்போதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று 7 ஆயிரம் சாலைகளை ஒப்படைத்திருக்கின்றோம். இப்போது அதை implement *செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

உங்களுடைய 5 ஆண்டு ஆட்சியில் 28,628 கிலோ மீட்டர் சாலைகளை ஊரக வளரச்சித் துறையில் மேம்படுத்தியிருக்கின்றீர்கள். 3,863 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறீர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 46,555 கிலோ மீட்டர் சாலைகள் 8,756 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி இருக்கின்றோம். எனவே, 10 வருடங்களுக்கும் மேற்பட்ட சாலைகள் விடுபட்டிருந்தால் அவை கண்டிப்பாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பல்வேறு ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சாலைகள் மற்றும் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு லாயக்கற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. மழை தொடர்ந்து பெய்யக்கூடிய மாவட்டம். ஆகையால், நகராட்சிப் பகுதிகளில் தார்ச் சாலைகள் விரைவில் அரித்துக்கொண்டு போகக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.* Paver block *போடக்கூடிய தகுதி பெற்ற சாலைகள் அங்கே அதிகமாக இருக்கின்றன. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அதனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதுமட்டுமல்ல. தற்போது மத்திய அரசாங்கத்திடமிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு 14,500 கோடி ரூபாய் வர வேண்டி இருக்கின்றது. அந்த நிதியினையும் பெற்று முழுமையாக சாலைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமாய்*

கேட்டுக்கொள்கிறேன். நிறைய இடங்களில், major roads—ல் இதரச் சாலைகளும், மாவட்டச் சாலைகளும் இடையிடையே குறுக்கிடுகின்றன. எங்களுடைய பகுதியில் கேரளா பார்டர் வருகின்றது. எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய அந்தச் சாலைகளை இணைக்கக்கூடிய பகுதிகளிலும் நிறைய கிராமச் சாலைகள் சென்று இணைகின்றன. இந்தச் சாலைகள் எல்லாமே பல ஆண்டுக் காலமாக செப்பனிடப்படாமல் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. பெரிய அளவில் முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, எங்கள் தொகுதிக்கு ஒரு தனி fund கொடுத்து உதவ வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியானது ஊராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய சாலைகளைப் பற்றியதாகும். இருந்தாலும் பேரூராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். ஊரகப் பகுதிகளைப் பற்றிதான் நான் சொன்னேன். இதற்கு முன்பு 46,555 கிலோ மீட்டர் develop செய்திருக்கின்றோம். பேரூராட்சி சாலைகளைப் பற்றி கேட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் எந்தச் சாலை என்பதை குறிப்பிட்டுச் சொல்வீர்களென்றால், கண்டிப்பாக அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், 234 தொகுதிகளிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில், அதிகமான சாலைகள் இந்த ஐந்தாண்டுகளில் போடப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில், உங்களுடைய தொகுதியில் எந்தச் சாலைகள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவை மேம்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.